டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.05.2026 புதன்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 274 - Madurai | Online Edition

# விவசாயிகளின் வாழ்க்கையை எளிமையாக்க முக்கிய சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படுகின்றன

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தகவல்

புது தில்லி, மே 19

விவசாயிகள், வர்த்தகர்கள், வேளாண் துறை சார்ந்தவர்களுக்கான செயல்முறைகளை எளிதாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய வேளாண்மை அமைச்சகம் நேற்று முன்தினம் ஆய்வு செய்தது. மேலும், வேளாண் நிர்வாகத்தை மேலும் வெளிப்படையானதாகவும், தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், திறமையானதாகவும் மாற்றுவதற்காக, பிரதமர் நரேந்திர மோடியின் 'சீர்திருத்த தொடரின்' கீழ் அமைச்சகம் மாற்றங்களை விரைவுபடுத்தும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

கூட்டத்தின் போது, வேளாண்மை அமைச்சகத்தின் செயலாளர் ஆதிஷ் சந்திரா, அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சீர்திருத்தங்கள், வரவிருக்கும் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவை குறித்து மத்திய வேளாண்மை அமைச்சருக்கு விரிவாக விளக்கினார்.

வீட்டுப் பூச்சிக்கொல்லிகளின் விற்பனை மற்றும் சேமிப்பிற்கான உரிமம் வழங்கும் செயல்முறை கணிசமாக எளிமையாக்கப்பட்டுள்ளது என்று செயலாளர் ஆதிஷ் சந்திரா தெரிவித்தார். உரிமம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மூன்று பக்கங்களிலிருந்து ஒரே பக்கமாகக் குறைக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

இந்த சீர்திருத்தத்தால், கொசு விரட்டி விரிப்புகள், சுருள்கள், திரவ ஆவியாக்கிகள், கரப்பான்பூச்சித் தெளிப்பான்கள் போன்ற பொருட்களை விற்பனை செய்யும் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை கடைக்காரர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் பொருட்களின் இறக்குமதியை எளிதாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்த விவரங்களை வழங்கிய அதிகாரிகள், நாட்டிலுள்ள அனைத்து 649 சுங்கத் துறைமுகங்களிலும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக தெரிவித்தனர்.

வேளாண் துறையில் வெளிப்படைத்தன்மை, தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக சீர்திருத்த செயல் முறையை மேலும் தீவிரப்படுத்துமாறு மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். இந்த சீர்திருத்தங்களின் நோக்கம், விவசாயிகள், வர்த்தகர்கள், தொழில்முனைவோர், வேளாண் துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர் ஆகியோருக்கு நடைமுறை களை எளிமையாக மாற்றுவதே என்று அவர் கூறினார்.

# சமச்சீர் உர மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, மே 19

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரம், வீரனேந்தல்-செங்குளம் கிராமத்தில் வேளாண்மைத் துறை அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சமச்சீர் உர மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி சிறப்புரை யாற்றினார். கருணாநிதி, மூத்த வேளாண்மை அலுவலர் (திரவ உயிர் உரம் உற்பத்திமையம்-மானாமதுரை) உர பயன்பாடு மற்றும் சமச்சீர் உர மேலாண்மை குறித்து தொழில்நுட்ப உரையாற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் த.முத்துப் பிரியா வேளாண்மை விரிவாக்க மையத்தில் இடுபொருட்களின் இருப்பு விபரம் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாட்டினை அட்மா பணியாளர்கள் செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மானாவாரி விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, மே 19

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் செங்கப்படை கிராமத்தில் மானாவாரி விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை மதுரை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) இராணி தலைமையேற்று துவக்கி வைத்து விவசாயி களிடம் மானாவாரி விவசாயம் பற்றியும், விவசாய அடையாள எண் பெறுவதற்கான வழிமுறைகளையும், பாரத பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ ஊக்கத் தொகை யினை பெறுவதற்கான வழிமுறைகளையும் விளக்கினார். ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், மானாவாரி விவசாயத்தில் சாகுபடி செய்யக்கூடிய பாசிப்பயறு, உளுந்து, பருத்தி மற்றும் சிறுதானியம் ஆகிய பயிர்களை தாக்கக்கூடிய பூச்சி மற்றும் நோய் தாக்குதலின் அறிகுறிகள் பற்றியும், அதனை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும், உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் சுந்தரகிருஷ்ணன், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மானாவாரி விவசாயத்திற்கான மானியத் திட்டங்கள் பற்றி விவசாயிகளிடம் விளக்கினார். கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி, சமச்சீர் உரப் பயன்பாடு பற்றியும், காட்டுப் பன்றிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கினார். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவி தொழில்நுட்ப மேலாளர் யுவராஜ் குமரன் நன்றி தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## குழந்தைகளுக்கான ஆரோக்கியமான / வயது வரம்பிற்கேற்க ஸ்நாக்ஸ் வகைகள்

நேற்றைய தொடர்ச்சி...

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சத்தான மற்றும் சுவையான ஸ்நாக்ஸ் மிகவும் அவசியம். இங்கே பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான ஸ்நாக்ஸ் குறிப்புகள் தொகுத்து அளித்துள்ளேன்.

**3. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்**

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நாள் முழுவதும் ஆற்றல் தேவைப்படும். அவர்களின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு உதவும், நீண்ட நேரம் பசி தாங்கக்கூடிய ஸ்நாக்ஸ்களை வழங்க வேண்டும். பள்ளிக்கு எடுத்துச் செல்லக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும்.



**சப்பாத்தி ரோல்**

சப்பாத்தியில் காய்கறி அல்லது பனீர் மசாலா வைத்து ரோல் செய்து கொடுக்கலாம். பள்ளிக்கு எடுத்துச் செல்ல எளிதானது.

**பாப் கார்ன்**

வீட்டில் தயாரிக்கப்பட்ட, குறைந்த உப்பு மற்றும் வெண்ணெய் கொண்ட பாப்கார்ன் ஒரு ஆரோக்கியமான ஸ்நாக்ஸ்.




தொகுப்பு : G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.

நாளை தொடரும்...

# எஸ்.புதூர் வட்டார பூசாரிபட்டி கிராமத்தில் சமச்சீர் உர மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி




சிவகங்கை, மே 19

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண் அறிவியல் நிலையம் – குன்றக்குடி சார்பில் 15.05.26 அன்று பூசாரிபட்டி கிராமத்தில் சமச்சீர் உர மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் நா. ஞானவேல் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வேளாண்மை அலுவலர் ப.கார்த்திகா பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரித்தல் மற்றும் மண் ஆய்வின்படி உரமிடுதலின் முக்கியத்துவம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

எஸ்.புதூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ந.ஞான வேல், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வேளாண் அறிவியல் நிலைய குன்றக்குடி உதவி பேராசிரியர் பிரபு, சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை மண்ணின் வளம் மற்றும் தட்ப வெப்பநிலை போன்றவற்றிற்கு ஏற்ப தழைசத்து சாம்பல் சத்து மணிசத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதம் சரியான நேரம் மற்றும் சரியான முறைகளில் பயன் படுத்தும் வழிமுறையாகும். மண் வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள் உயிர் உரங்கள் இரசாயன உரங்கள் போன்றவற்றை தேவைகேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண் வளஅட்டையின் பரிந்துரைகளின் படி பயன்படுத்த வேண்டும்.

இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும் அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன்பாடுகள் தவிர்க்கபடுவதால் விவசாயிகளுக்கான் செலவு குறையும். பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுசூழல் பாதிக்கபடாத வகையில் தழைசத்து மண்ணில் அதிகரிக்கலாம். அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியா சல்பேட் போன்ற தழைசத்து உரங்களின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம் போன்ற தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள தலைமணி மற்றும் சாம்பல் சத்துக்களை பயிர்கள் எளிதாக எடுத்து கொள்ளும் வகையில் மாற்றி தரபடுகிறது. மேலும் பயிர் வளர்ச்சியினை நிலைகளுக்கு ஏற்ப அடி உரம் தூர்கட்டும் பருவம் பூக்கும் பருவம் என பிரித்து உரங்களை இடுவதால் சத்துக்கள் வீணவது என்பது வெகுவாக குறைக்கபட்டு விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்கள் நெல் நுண்ணூட்டம் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள் இலை வண்ண அட்டை போன்ற பொருட்கள் கண்காட்சியாக விவசாயிகள் பார்வைக்கு வைக்கபட்டிருந்தது. உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த், பயிற்சிக்கு உண்டான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார் மற்றும் பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

# தலைக் கவசம் உயிர்க் கவசம்



# அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்ய கூடாது

திருச்சி, மே 19

உரம் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்ய கூடாது மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை உடன் சமச்சீர் வகையில் உரங்களை பயன்படுத்த வேண்டும் வேளாண்மை துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.





திருச்சி மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் வசந்தாவின் அறிவுரையின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், திருச்சி மாவட்டத்தில் துறையூர் வட்டாரம் மற்றும் உப்பிலியாபுரம் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் வீரமணி மற்றும் செல்வகுமாரி, வேளாண்மை அலுவலர்கள் நல்லேந்திரன், கமல் மற்றும் விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், உரங்களின் அதிகபட்ச விலைகள் மாற்றப்பட்டு வருவதால் அதிகபட்ச விலையில், புதிதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும். உரம் முட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது, என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக் கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லி உடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது.

விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்க வேண்டும், நானோ யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்தி, அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன், சமச்சீர் வகையில் உரங்களை அனைத்து பயிருக்கு வழங்கப்படும் போது உரத்தின் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# இரங்கப்பநாய்க்கன்பாளையம் கிராமத்தில் சமச்சீர் உர பயன்பாடு குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம்




நாமக்கல், மே 19

நாமக்கல் அருகே உள்ள இரங்கப்பநாய்க்கன்பாளையம் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா), திட்டத்தின் கீழ் சமச்சீர் உர பயன்பாடு குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர், (உழவர் பயிற்சி நிலையம்), பிரேமா தலைமை வகித்து பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும், அதிக மகசூல் பெறுவதற்கும் தேவையான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் சரியான விகிதத்தில் மண்ணில் இட்டுப் பராமரிப்பதே சமச்சீர் உரம் பயன்பாடாகும். இது மண் வளத்தைக் காப்பதோடு, சுற்றுச் சூழலையும் பாதுகாக்கிறது என்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார்.


நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா முன்னிலை வகித்து வேளாண்மைத் துறையின் மானியத் திட்டங்கள், நுண்ணீர் பாசனத் திட்டம், பயிர் காப்பீடு திட்டம் மற்றும் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் ஆகிய திட்டங்கள் பற்றியும் பல தானியம் விதைப்பு முறை, பசுந்தாள் உரம், உயிர் உரங்களின் பயன்பாடுகள், மண்புழு உரம் தயாரிப்பு, களர், உவர் நிலச் சீர்திருத்தம், ரசாயன உரங்களின் அளவை குறைத்து கரிமச்சத்து அதிகரிக்க இயற்கை இடுபொருட்களை பயன்பாடு குறித்து பயிற்சியளித்தார்.

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய மண்ணியல் விஞ்ஞானி சிவரஞ்சனி சரியான ஊட்டச்சத்து, மண் வளம் மேம்பாடு, மகசூல் அதிகரிப்பு, மண் பரிசோதனை, மண்வள அட்டை பரிந்துரை, ஒருங்கிணைந்த உரமிடுதல், சமச்சீர் உரங்களின் முக்கியத்துவம், அவற்றைப் பயிர்களுக்கு எவ்வாறு இடுவது என்பது குறித்து விளக்கமாக பயிற்சியளித்தார்.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் விவசாய நலத் திட்டங்கள், மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகள் நேரடியாகவும் எளிதாகவும் பெறுவதை உறுதி செய்வதற்காகவே 'விவசாயி அடையாள எண்' (ய்ப்புயூனிசியூ ணூம்) உருவாக்கப்படுகிறது. ஆதார் அட்டை போன்று இது விவசாயி களுக்கான பிரத்யேக டிஜிட்டல் அடையாளமாகும். விவசாயிகள் தங்கள் நில ஆவணங்கள், ஆதார் எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் ஆகியவற்றை பயன்படுத்தி, (TAMIL NADU FARMER REGISTRY TN) வலைதளம் மூலமாகவோ அல்லது அருகிலுள்ள பொது சேவை மையம் (CSC) மூலமாகவோ இந்த அடையாள எண்ணைப் பதிவு செய்து பெறலாம் என விளக்கமளித்தனர்.

முகாமில் வேளாண்மை அலுவலர், கோகிலா, துறை சார்ந்த மானிய திட்டங்கள், விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், உயிரியல் பூஞ்சான கொல்லிகள் மூலம் விதைநேர்த்தி செய்தல், நுண்ணூட்டக் கலவைகள் பயிருக்கு இடுவதன் முக்கியத்துவம் குறித்தும், வட்டார உதவி வேளாண்மை அலுவலர் மாலதி. துறை சார்ந்த மானியத் திட்டங்களை எடுத்துக் கூறினர்.

அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் இரமேஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர் கவிசங்கர் ஆகியோர் வருகை புரிந்த விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தல், உழவன் செயலி, விவசாயி அடையாள எண் பதிவு செய்வதன் பயன்களை விளக்கமளித்து பதிவேற்றம் செய்து நன்றி கூறி முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மகசூல் முதல் மருத்துவம் வரை தேனீக்கள் இன்றி அமையாது உலகு




தேனீக்கள் இன்றி ஒரு நிமிடம் கூட உயிர் வாழ முடியாது. அப்படிபட்ட தேனீக்கள் இன்று நாம் கண்ட கண்ட பூச்சி மருந்துகளை தெளித்து அழித்து வருகிறோம். இந்த உலக தேனீக்கள் தினத்திலாவது நாம் தேனீக்களை பாதுகாப்போம் என்று உறுதி மொழியை எடுப்போம். ஐ.நா சபையால் உலக தேனீக்கள் தினமாக 2018 முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கு முன்னதாக எனக்கு தெரிந்த தேனீக்கள் பற்றிய தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**தேனீக்கள் எத்தனை வகைப்படும்?**

1) மலைத்தேனீ 2) கொம்பு தேனீ 3) அடுக்கு தேனீ 4) கொசுத்தேனீ

**தேனீக்களின் வாழ்க்கை**

தேனீக்கள் வாழும் வாழ்க்கை ஒரு கூட்டு குடும்ப வாழ்க்கை (காலனி டைப்). இதில் பின்வரும் உறவுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு தேனீ கூட்டை அமைத்து மலர்களிடம் இருந்து தேனை சேகரிக்கின்றன. அவற்றில் முதன்மையானது,

**1) இராணித் தேனீ (QUEEN BEE)**

ஒரு கூட்டத்தில் ஒரு ராணித்தேனீ தான் இருக்கும். இது உருவத்தில் பெரியது. இதனால் உணவு சேகரிக்கவோ, கூடு கட்டவோ இயலாது. 3 ஆண்டுகள் வரை உயிர் வாழும். தினமும் 500 முட்டைகளை இடும் வல்லமை படைத்தவை. முட்டையிடும் ராணி தேனீ தான் ராயல் ஜெல்லியை சுரந்து மற்ற தேனீக்களுக்கு அளிக்கும்.

**2) ஆண் தேனீ (DRONE BEE)**

வேலைக்கார தேனீக்களை விட பெரியது, ராணித்தேனீயை விட சிறியதாக இருக்கும். இதனுடைய வாழ்க்கை காலம் 90 நாட்கள். இன விருத்தியை மட்டும் செய்யும். கூட்டில் இருந்து வெளிவந்த 2 வாரங்களில் ராணித்தேனீயுடன் இன விருத்தி செய்ய தயாராகிவிடும். இன விருத்தி முடிந்தவுடன் மடிந்து விடும்.

**3) வேலைக்கார தேனீக்கள் (WORKER BEE)**

உருவத்தில் சிறியவை கூட்டில் ஆயிரக்கணக்கான அளவில் இருக்கும். இதனுடைய வாழ்நாள் 60 நாளாகும். இதனுடைய உடல் முழுவதும் கிளைகளுடைய ரோமங்கள் இருக்கும். மலர்களிடம் தேனை சேககரிப்பது, கூடு கட்டுவது, பராமரிப்பு, பாதுகாப்பது போன்ற பணிகளை தொடர்ந்து செய்யும். தேன் கூட்டில் உழைக்கும் வர்க்கம் தினமும் 3–5 கி.மீ வரை பறந்து தேனை சேகரிக்கும்.

இன்று தேனீ வளர்ப்பு ஒரு குடிசை தொழிலாக மாறி வருகின்றன. அதுமட்டுமல்லாது இலாபகரமான தொழிலாக மாறி வருகின்றது. மஞ்சள் நிற பூக்கள் தேனீக்களுக்கு பிடித்தமானவை.

தேனீ வளர்ப்புக்கு பயிற்சியும் முயற்சியும் தேவை. ஒவ்வொரு மாதமும் வேளாண் அறிவியல் மையங்களில் குறிப்பிட்ட தேதிகளில் தேனீ வளர்ப்பு பயிற்சியை இலவசமாகவோ / கட்டணப் பயிற்சியாகவோ நடத்தப்படுகிறது. தேனீக்கள் பற்றிய படிப்பிற்கு (APICULUTRE) தேனீக்களிடமிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான தேன் மெழுகு, ராயல் ஜெல்லி, தேனீ விசம் போன்றவை எடுக்கப்படும் பிரபல தனியார் நிறுவனங்களும் கடச்சனேந்தல் ஜோஸ்பின் மேரி, திருநெல்வேலி நற்பவி போன்ற மகளிர்கள் விவசாயிகளுக்கு



தேனீக்கள் வளர்ப்பது குறித்து பயிற்சி வழங்குகிறார்கள். தேனீக்களை வளர்க்க நியூட்டன் மரப்பெட்டியை பயன்படுத்து கிறார்கள். இந்த பெட்டி தோட்டக்கலை துறை வாயிலாக மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**தேனீக்கள் மகசூலில் பங்கு**

தென்னந்தோப்புகள், சூரிய காந்தி போன்ற அயல் மகரந்த சேர்க்கை நடைபெறும் பயிர்களில் தேனீக்களை பெட்டி மூலமாக வளர்த்தால் இரண்டு மாதங்களில் தேனும் கூடுதலான மகசூலும் கிடைக்கும்.

சித்த அயூர்வேத மருத்துவத்தில் தேன் முக்கிய பங்காற்று கிறது. சுத்தமான தேன் எக்காலத்திலும் கெட்டு போவதில்லை.

சுறுசுறுப்புக்கு எடுத்துகாட்டு தேனீக்கள், தித்திப்பான இனிப்புக்கு தேன்.

**இந்த ஆண்டின் தீம் என்ன? (THEMES)**

மக்கள் மற்றும் பூமியின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுவதில் தேனீக்களின் பங்கு என்பதாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு

விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்து, பயிர் சாகுபடி செய்யுமாறு, திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறையின், வேளாண்மை உதவி இயக்குனர் பொ. பொம்முராஜு கேட்டுக் கொண்டுள்ளார்.



மேலும் ஊட்டமேற்றிய தொழு உரம் அவசியம் மற்றும் நன்மைகளையும் எடுத்து கூறியுள்ளார்.

ஊட்டமேற்றிய தொழு உரம் (Enriched Farmyard Manure - EFYM) என்பது சாதாரண தொழு உரத்துடன் பயிர்களுக்குத் தேவையான நுண்ணுயிரிகள் மற்றும் ஊட்டச்சத்துக்களைச் சேர்த்து செறிவூட்டப்படும் முறையாகும். இது மண்ணின் வளத்தை அதிகரிப்பதோடு, பயிர் மகசூலை பன்மடங்கு உயர்த்துகிறது.

**தேவையான பொருட்கள்**

(ஒரு ஏக்கருக்கு) நன்கு மக்கிய தொழு உரம் - 600 - 750 கிலோ, சூப்பர் பாஸ்பேட் (மணிச்சத்து) - 100 - 125 கிலோ, வேப்பம் புண்ணாக்கு - 10 கிலோ, உயிர் உரங்கள் (தலா 1 கிலோ) - அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, சூடோமோனஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி.

**கலவை தயார் செய்தல்**

நிழலான இடத்தில், முதலில் நன்கு மக்கிய தொழு உரத்தைக் கொட்டி பரப்பி கொள்ளவும்.

நுண்ணுயிரிகள் சேர்த்தல்

அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் சூடோ மோனஸ் போன்ற உயிர் உரங்களை சிறிது தண்ணீரில் கரைத்து, தொழு உரத்தின் மீது தெளித்துக் கலக்கவும்.

**பாஸ்பேட் சேர்த்தல்**

இதனுடன் சூப்பர் பாஸ்பேட் மற்றும் வேப்பம் புண்ணாக்கைச் சேர்த்து சீராகக் கிளறவும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



**ஈரப்பதம் காத்தல்**

இந்தக் கலவையில் சாணம் தெளித்து 'புட்டு' பதத்திற்கு ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**மூடுதல்**

இந்த உரக் குவியலைச் சாக்கு அல்லது களிமண் கொண்டு காற்று புகாமல் மூடி நிழலில் வைக்க வேண்டும்.

**பயன்பாடு**

15 முதல் 30 நாட்களுக்குப் பிறகு (சூப்பர் பாஸ்பேட்டில் உள்ள மணிச்சத்துக்கள் தொழுஉரத்துடன் முழுமையாகக் கலந்தவுடன்) இந்த ஊட்டமேற்றிய உரம் பயன்பாட்டிற்குத் தயாராகி விடும்.

**ஊட்டமேற்றிய தொழு உரத்தின் நன்மைகள்**

**ஊட்டச்சத்துக்கள் இருமடங்கு**

சாதாரண தொழு உரத்தை விட இதில் மணிச்சத்து (Phosphorus) மற்றும் தழைச்சத்து (Nitrogen) பல மடங்கு அதிகமாக இருக்கும்.

**வேர் வளர்ச்சி**

பாஸ்பரஸ் சத்து எளிதில் கிடைப்பதால் பயிர்களின் வேர் நன்றாக ஆழமாக வளரும்.

**நோய் எதிர்ப்பு சக்தி**

டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனஸ் போன்ற நுண்ணுயிரிகள் இருப்பதால், வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்கள் தடுக்கப்படும்.

**நன்மைகள்**

பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் உடனடியாகவும், எளிதாகவும் கிடைக்கின்றன. மண்ணின் வளம் மற்றும் நீரைத் தேக்கி வைக்கும் திறன் அதிகரிக்கிறது. வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களைத் தடுக்கும் நுண்ணுயிரிகள் பயிரைப் பாதுகாக்கின்றன. மானாவாரி நிலங்களிலும் நல்ல மகசூல் பெற உதவுகிறது.

**செலவு குறைவு**

ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, தரமான விளைச்சலைத் தரும்.

# அட்மா – உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் குறித்த விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை, மே 19

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண் துறை – அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் உயிரியல் கடடுப்பாட்டு காரணிகள் குறித்த விவசாயிகள் பயிற்சி செங்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி, நெல் இரகங்கள் தேர்வு மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு பற்றி கூறினார். கருணாநிதி, மூத்த வேளாண்மை அலுவலர் (திரவ உயிர் உரம் உற்பத்தி மையம்–மானாமதுரை) நெல் பயிரில் விதைநேர்த்தி, உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் உயிர் உரங்களின் கட்டுப்பாட்டு முகமை குறித்த தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் கரும்பு செல்வம், வேளாண்மை துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி, பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதைநேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அங்கக வேளாண்மையின் சிறப்பு

பூமி உருவாகி, உயிர்கள் தோன்றி வளருவதற்கு தேவையான அனைத்து உணவுப்பொருட்களும் செடி, கொடி மற்றும் மரங்கள் மூலம் தானியங்களாகவும், காய்களாகவும், கனிகளாகவும் கிடைத்தன. பல்வேறு விதமான உயிர்களும், அந்த உயிர் களுக்கு உணவளிக்கும் பிற உயிரினங்களான செடி, கொடி மற்றும் மரங்கள் வாழ்வதற்கு ஐம்பூதங்களே இன்று வரை ஆதாரமாக இருக்கிறது.

எந்த உயிரினமானாலும் கீழ் இருக்கும் நிலத்தை வாழ்விடமாக கொண்டு மற்ற ஐம்பூதங்களான நீர், நெருப்பு மற்றும் காற்று ஆகியவற்றையும் பயன்படுத்தி மேல் இருக்கும் மற்றொரு ஐம்பூதமான ஆகாயத்தை நோக்கி வளர்கிறது.

நிலத்தில் உள்ள பாறைகள் மேற்படி ஐம்பூதங்களின் செயல்பாட்டால் சிதைந்து சிறுசிறு துகள்களாக்கப்பட்டு, மேலும் அந்நிலத்தில் வாழும் சிறிய, பெரிய உயிரினங்கள் வாழ்ந்து மடிவதன் மூலம் அவற்றின் உடலகங்கள் மக்கி நன்கு அந்த துகள்களுடன் கலந்து, 75க்கும் மேற்பட்ட சத்துக்களைக் கொண்ட வளமான மண் உருவானது. இவ்விதம் செழுமை யாகவுள்ள மண்ணில் இயற்கையாகவும் தாவரங்கள் விளைந்தன. செயற்கையாகவும் பயிர்கள் விளைவிக்கப்பட்டன.

நாளடைவில் மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவால் உணவுத்தேவை அதிகரித்ததாலும், அதன் தொடர்ச்சியாக விவசாயம் தொழிலாக உருவெடுத்ததால் செயற்கையான இராசயன உரங்கள் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி மற்றும் பூசணக் கொல்லிகள் களைக்கொல்லிகள், மரபணு மாற்றங்கள் செய்யப் பட்ட பயிர்கள் என பயன்படுத்தப்பட்டு, அவ்விதம் விளைவிக்கப் பட்ட விளை பொருட்களை உண்டு, அதன் விளைவால் மனித இனம் மற்றும் பிற உயிரினங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

மனிதர்களில் ஆரோக்கிய கேடு மற்றும் இனம் புரியாத நோய்கள் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் தற்போது மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, பாது காப்பானதாக, ஆரோக்கியமானதாக மற்றும் தரமானதாக தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்களை தேடிச் செல்கின்றனர்.

அதற்கான ஒரே தீர்வு, அங்கக வேளாண்மையின் மூலம் இரசாயன உரமிடாமல் இரசாயன பூச்சி மற்றும் பூசணைக் கொல்லிகள் தெளிக்காமல், பயிர் சாகுபடி செய்து 'ஆர்கானிக் ஃபுட்' எனப்படும் உணவு தானியங்களை தயாரித்து வழங்குவதே ஆகும். இதன்மூலம் சுற்றுப்புற சூழ்நிலையும் பாதுகாக்கப்படும், மண்ணும் கெடாமல் இருக்கும், நீர்நிலைகளும் பாது காக்கப்படும்.

## அங்கக வேளாண்மையின் நன்மைகள்

அங்கக வேளாண்மையின் மூலம் தயாரிக்கப்படும் கிழங்கு பயிர்களில் கிழங்கு பெரியதாகவும் மற்றும் கீரையில் அதிக தளையும் கிடைக்கிறது.

தானியப்பயிர்களில் புரதச்சத்து சற்று குறைவாக இருந்த போதிலும், தரமான புரதம் அதிக அளவிலும், நல்ல அமினோ அமிலங்கள் அதிக அளவிலும் கிடைக்கிறது.

அங்கக வேளாண்மையின் மூலம் பயிரிடப்பட்ட பயிர் உணவுகளில் மெக்னிசியம், இரும்புச்சத்து மற்றும் பாஸ்பரஸ் சத்து அதிக அளவில் காணப்படுகிறது. கால்சியம், சோடியம், பொட்டாசியம் ஓரளவிலும், மாங்கனிஸ், அயோடின், குரோமியம் மாலிப்டினம், செலானியம், போரான், தாமிரம் வெனடியம் மற்றும் துத்தநாகம் குறைந்தபட்ச அளவிலும் காணப்படுகிறது. ஆக்ஸிஸனேற்றிகளான பாலிபினால், சாலிசிலிக் அமிலம், ரெஸ்வராட்ரால், வைட்டமின் 'சி' மற்றும் கரோட்டினாய்ட்கள் உள்ளன. புற்றுநோயை எதிர்த்து செயல்புரியும் ஆக்ஸிஸ னேற்றிகள் 30 சதவீதம் கூடுதலாக அங்கக வேளாண்மையின் மூலம் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம் மற்றும் ஸ்ட்ரா பெர்ரிகளில் காணப்படுகிறது.

அங்கக வேளாண்மையின் மூலம் சாகுபடி செய்யப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் அழகான வாசனையையும் சிறப்பான ருசியையும் கொண்டு இருக்கிறது. மேலும் அக்காய் களையும் பழங்களையும் நீண்ட நாட்கள் வைத்திருந்து பயன்படுத்தலாம். அங்கக வேளாண்மையில் நாட்டு ரகங்களை சாகுபடி செய்தல் வேண்டும். டிரைக்கோகிரமா, மற்றும் சூடோமானாஸ் போன்ற உயிர்ப்பூசணக்கொல்லிகளைக் ஒரு கிலோ விதைக்கு முறையே 4 கிராம் 10 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 5 டன் அளவில் நன்கு மக்கிய தொழுஉரத்தையும், பயிர்களுக்கேற்ப

உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டிரியா போன்றவற்றை மண்ணுடன் நன்கு கலந்து இட வேண்டும். மண்புழு உரத்தையும் தயாரித்து இடவேண்டும். பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும் சத்துக்கரைசலாகவும் மாட்டு கோமியத்தையும் (800 மில்லி லிட்டர் நீரில் 200 மில்லி லிட்டர் கோமியம் கலந்து), பஞ்சகவ்யா, அமிர்தக்கரைசல் போன்ற வற்றை தயாரித்து சத்துக் கரைசலாகவும், பூச்சி, பூசணக் கொல்லியாகவும் பயன் படுத்தலாம். நொச்சி இலை, சோற்றுக் கற்றாழை பீநாரி என்ற பீச்சங்கு இலை, எருக்கு இலை வேப்பங்கொட்டை ஆகியவற்றை சேர்த்து அரைத்து கரைசல் தயாரித்து பூச்சி, பூசணக் கொல்லி யாகவும் பயன்படுத்தலாம்.

இவ்விதமாக அங்கக வேளாண்மையில் ஐம்பூதங்களின் உதவி உடன் அந்த ஐம்பூதங்களையும் மாசுபடுத்தாதவாறு முறையாக அங்கக இடுபொருட்களை தேர்வு செய்து பயிர் சாகுபடியில் உயர் மகசூல் பெற்று விமில்லா உணவை, உயிர்களுக்கு தயாரித்து அளிப்பது தாயுள்ளம் கொண்ட விவசாயிகளின் கடமையாகும். இதன் மூலம் சுற்றுப்புற சூழ்நிலையும் பாதுகாக்கப்படும், தண்ணீர் மாசுபடுவதும் தவிர்க்கப்படும். அதன் பயனாக நோய் நொடியற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்.

தகவல் : *ம.மகேஸ்வரன், வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை ஆய்வகம், திருநெல்வேலி.*

# விதைப்பரிசோதனை செய்வீர்! விளைச்சலை அதிகரிப்பீர்!!

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் விதைப்பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. இவ்வாய்வகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகளின் தரங்களான சுத்தத்தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற இரக கலவன்கள் போன்ற விதைத்தரத்தை ஆய்வு செய்து, ஆய்வறிக்கை வழங்கப் படுகிறது. நம் விருதுநகர் மாவட்டத்தில் மக்காச்சோளம், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், காய்கறி பயிர்கள், எள், பருத்தி மற்றும் கடலை ஆகியன பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது அதிக மகசூல் பெற முடியும். நெல், மக்காச்சோளம் போன்ற தானியங் களுக்கு 80 முதல் 90 சதவீதமும், பயறு வகைகளுக்கு 75%, ரகப் பருத்திக்கு 65%, வீரிய ஒட்டு பருத்திக்கு 75%, எள்ளுக்கு 80% மற்றும் கடலைக்கு 70% முளைப்புத்திறன் இருக்க வேண்டும்.

மேலும் அனைத்து விதைகளிலும் குறைந்தபட்சம் 97-98% சுத்தத்தன்மை இருக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் நெல், மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளுக்கு முறையே 13, 12% பயறு மற்றும் கடலை வகை விதைகளுக்கு 9 சதவீதமும் இருத்தல் வேண்டும். சான்று பெறப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். மேலும், விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து பயன் பெறலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் ஜானகி மற்றும் சாய்லட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் விபரங்களுக்கு 94868 58066 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



# கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் கோடை உழவு செய்து பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு

புதுக்கோட்டை, மே 19

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் தற்சமயம் பரவலாக பெறப்பட்டுள்ள மழையினை பயன்படுத்தி கோடை உழவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பங்குனி, சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் பெய்யும் மழையானது கோடை மழை என்றழைக்கப்படுகிறது. இந்த சமயங்களில் பெய்யும் மழையினால் நிலத்தின் மேல் பகுதியில் உள்ள மண் அதிக வெப்பமடைகிறது. எனவே கோடை காலத்தில் பெய்யும் மழை நீரானது பூமிக்குள் செல்ல வழிவகுத்து நீரை நிலத்தில் சேமித்திட கோடை உழவு அவசியமாகிறது.

கோடை காலங்களில் பெய்யும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்வதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. மண்ணில் உள்ள பெருங்கட்டிகள் உடைந்து மண்ணுக்குள் காற்று மற்றும் நீர் ஆகியவை எளிதாக உட்புகுந்து செல்ல வாய்ப்பிருப்பதால் பயிர்களின் வேர்கள் மண்ணுக்குள் நன்கு ஆழமாக ஊடுருவி பரவமுடியும். இதனால் மண் அரிப்பு குறைந்து மண்ணில் நீர் ஊடுருவும் திறனும், நீர் பிடிப்புத் திறனும் அதிகரிக்கும். மண்ணில் நீர் பிடிப்புத்திறன் அதிகரிப் பதால் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் எளிதாக கிடைக்கும். கோடை உழவினால் மண்ணில் உள்ள பூச்சிக் கொல்லி களைக்கொல்லி எஞ்சிய நஞ்சுகள் மற்றும் களை களின் விதைகள் மற்றும் முந்திய பயிர்களின் வேர்களில் இருந்து வெளிப்படும் ரசாயனங்கள் சிதைக்கப்பட்டு விடும். பயிர் களில் நோயை உண்டாக்கும் தீமை செய்யும் நுண்கிருமிகள், நூற்புழுக்கள் மற்றும் பூச்சிகள் ஆகியவையும் வெளிக்கொண்டு வரப்பட்டு கோடை காலங்களில் நிலவும் அதிக வெப்பத்தினால் அழிக்கப்பட்டு விடும். எனவே விவசாயிகள் அனைவரும் தற்சமயம் பெறப்பட்டுள்ள மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து பயன்பெறுமாறு கந்தர்வகோட்டை வட்டார வோண்மை உதவி இயக்குநர் (பொ) விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

# டெல்டா மாவட்டத்திற்கு ஏற்ற குறுவை நெல் இரகங்கள்

தமிழ்நாட்டில் குறுவை பருவத்திற்கு (ஜுன்–அக்டோபர்), அதிக மகசூல் தரக் கூடிய, சாய்ந்து விழாத தன்மை கொண்ட, குறுகிய கால (90–115 நாட்கள்) நெல் இரகங்கள் தேவைப்படுகின்றன.

**பரிந்துரைக்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (TNAU) இரகங்கள் பின்வருமாறு :**

● **ADT 59 :** மிகவும் பிரபலமான, அதிக மகசூல் தரும் மற்றும் செலவு குறைந்த ஒரு இரகம். இது 110–115 நாட்களில் முதிர்ச்சியடைகிறது, 50% குறைவான உரமே தேவைப்படுகிறது, மேலும் உவர் நீர் மற்றும் பூச்சிகளுக்கு எதிராக வலுவான எதிர்ப்புத்திறனைக் கொண்டுள்ளது.

● **CO 51 :** சாய்ந்து விழாத தன்மை, அதிக மகசூல் திறன் மற்றும் குறுகிய கால வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட, காவேரி டெல்டா பகுதிக்கு ஏற்ற, பரவலாக விரும்பப்படும் ஒரு இரகம்.

● **ADT 53 :** இது 110–115 நாட்களில் முதிர்ச்சியடையும் ஒரு சன்ன இரகமாகும். மேலும், இது கோடை மற்றும் குறுவை பருவங்களில் மிகவும் பிரபலமானது.

● **CO 55 :** இது ஒரு குறுகிய கால (115 நாட்கள்) மிகவும் சன்ன ரகம், சமைப்பதற்கு ஏற்றதாக அறியப்படுகிறது.

● **ASD 16 மற்றும் ADT 37 :** பல டெல்டா விவசாயிகளால் விரும்பப்படும், பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட குறுகியகால பிரதான பயிர்கள்.

● **மற்ற குறுகிய காலத் தேர்வுகள் :** IR-36, IR-50, IR-64, ADT-36, ADT-37, ADT 43, ADT 45, ADT-47, ADT-48, ADT 56, ADT 57, CO-47, CO 54, ASD-16, ASD-17, ASD-20 மற்றும் MDU-5, MDU-6,TRY-5, TPS-5, PMK-2 an PMK (R) 3.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய இணைப்பேராசிரியர் முனைவர் மு.சகிலா மற்றும் திட்ட ஒருங் கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவிக்கின்றனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாட்டில் பயிர் உற்பத்தியில் உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகளின் பங்கு மற்றும் தாக்கம் – ஓர் பார்வை

தமிழ்நாடு ஒரு விவசாய மையமாக விளங்குகிறது. இங்கு நெல், பருப்பு, எண்ணெய் விதைகள், தோட்டக்கலை பயிர்கள் போன்ற பல்வேறு பயிர்கள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால் கடந்த சில தசாப்தங்களில் வேதியியல் உரங்களின் அதிகப்படியான பயன்பாடு காரணமாக மண் வளம் குறைந்து, சுற்றுச்சூழல் பாதிப்பு, நிலத்தடி நீர் மாசடைதல், மண் உயிரினங்களின் அழிவு போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையை மாற்றும் மாற்று வழியாக உயிர்சார் உரங்கள் (Biofertilizers) மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் (Bioinoculants) இன்று வேளாண்மையின் முக்கிய கூறுகளாகி வருகின்றன. இவை வேதியியல் உரங்களுக்கு மாற்றாக, இயற்கை நுண்ணுயிர்களின் செயல்பாட்டை பயன்படுத்தி மண்ணின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தும் சுற்றுச்சூழல் நட்பு தொழில்நுட்பமாகும்.

### உயிர்சார் உரங்களின் வரையறை மற்றும் செயல்முறை

உயிர்சார் உரங்கள் என்பது உயிர் நுண்ணுயிரிகளைக் கொண்ட உரங்கள் ஆகும். இவை மண்ணில் அல்லது விதை/வேர் பகுதியில் சேர்க்கப்பட்டு, தாவர வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்து தாவரத்திற்கு சீராகக் கிடைக்கச் செய்கின்றன.

### செயல்முறை

- நுண்ணுயிரிகள் நைட்ரஜனை வானிலிருந்து நிலைநிறுத்துகின்றன.
- பாஸ்பேட்டை கரைத்து தாவரத்திற்கு கிடைக்கச் செய்கின்றன.
- கரிமச் சேர்மங்களை உற்பத்தி செய்து மண் வளத்தை மேம்படுத்து கின்றன.
- தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஹார்மோன்கள் உற்பத்தி செய்கின்றன.
- இவை மண் இயற்கை சமநிலையை காக்கும் மற்றும் மண் உயிரினங்களின் செயல்பாட்டை தூண்டும்.

**உயிர்க்கள ஊக்கிகள் (Bioinoculants) - வகைகள் மற்றும் பங்கு**

உயிர்க்கள ஊக்கிகள் என்பது தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் நுண்ணுயிரிகள். இவை விதைகள், மண் அல்லது வேர் பகுதிகளில் சேர்க்கப்படுகின்றன.

**PGPR (Plant Growth Promoting Rhizobacteria) :** தாவர வளர்ச்சி ஹார்மோன்கள் (IAA, GA, Cytokinin) உற்பத்தி செய்கின்றன.

● வேர் நீளத்தையும் கிளைகளையும் அதிகரிக்கின்றன. Trichoderma spp.

● பூஞ்சை நோய்களை கட்டுப்படுத்தும் உயிர் எதிரி.

● மண் நோய்களின் தாக்கத்தை 60–70% வரை குறைக்கும். Pseudomonas fluorescens

● வேர் பகுதியில் நோய் தடுப்பு திறன் கொண்டது.

● நெல், காய்கறி, தோட்டப் பயிர்களில் பரவலாகப் பயன் படுத்தப்படுகிறது.

● Bacillus subtilis

● தாவர வளர்ச்சி ஊக்கி மற்றும் நோய் கட்டுப்பாட்டாளர்.

**Phosphate Solubilizing Microbes (PSM)**

● மண்ணில் உள்ள பாஸ்பேட்டை கரைத்து தாவரத்திற்கு பயன்படச் செய்கின்றன.

**தமிழ்நாட்டில் உயிர்சார் உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் தற்போதைய நிலை**

● தமிழ்நாடு அரசு 2000ம் ஆண்டிலிருந்து உயிர்சார் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

● தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூர் – உயிர்சார் உர உற்பத்திக்கான தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது.

● தமிழ்நாடு உயிர்சார் வேளாண்மை நிறுவனம் (TNOF) – உயிர்சார் விவசாயப் பயிற்சிகளை வழங்குகிறது.

● மாவட்ட வேளாண் அலுவலகங்கள் – விவசாயிகளுக்கு உயிர்சார் உரம் விநியோகம் செய்கின்றன.

**உற்பத்தி மையங்கள்**

திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, ஈரோடு, சேலம், புதுக்கோட்டை, திருநெல்வேலி.

**பயன்பாடு அதிகம் உள்ள பயிர்கள்**

நெல், சோளம், பருப்பு, நிலக்கடலை, மக்காச்சோளம், தோட்டப் பயிர்கள் (தக்காளி, மிளகாய், பூக்கோசு).

**உயிர்சார் உரங்களின் பயிர் உற்பத்தி மீதான தாக்கம்**

**மண் வளம் மீது தாக்கம்**

- உயிர்சார் உரங்கள் மண் உயிரினங்களின் எண்ணிக்கையை 30–40% அதிகரிக்கின்றன.
- கரிம கார்பன் அளவு 0.2% வரை உயர்கிறது.
- மண் pH சமநிலை திருத்தம் ஏற்படுகிறது.

**தாவர வளர்ச்சி மற்றும் விளைச்சல்**

நெல் – 15% வரை விளைச்சல் அதிகரிப்பு (TNAU ஆய்வு, 2022).

- பருப்பு வகைகள் – வேர் முடிச்சுகள் 25–30% அதிகரிப்பு.
- தோட்டப் பயிர்கள் – பழத் தரம் மற்றும் நீடிப்பு அதிகரிப்பு.

**பொருளாதார நன்மைகள்**

- வேதியியல் உர செலவு 25–35% குறைகிறது.
- விளைச்சல் மதிப்பு உயரும்.
- விவசாயிகளின் நிகர வருமானம் அதிகரிக்கும்.

**உயிர்சார் உரங்கள் பயன்பாட்டில் எதிர்நோக்கும் சவால்கள்**

1. விவசாயிகளிடையே விழிப்புணர்வு குறைவு – பலர் இன்னும் வேதியியல் உரங்களையே நம்புகின்றனர்.
2. நுண்ணுயிர்களின் உயிர்ச்சக்தி குறைவு – சேமிப்பு காலம் குறைவாக இருப்பது.
3. தரமற்ற பொருட்கள் சந்தையில் இருப்பது – சான்றிதழ் இல்லாத தயாரிப்புகள் பரவல்.
4. பயிற்சி மற்றும் வழிகாட்டல் பற்றாக்குறை.

**தீர்வுகள் மற்றும் அரசு நடவடிக்கைகள்**

1. Biofertilizer Quality Control Act அமல்படுத்தல்.
2. உயிர்சார் வேளாண்மை பயிற்சி மையங்கள் – ஒவ்வொரு மாவட்டத்திலும்.

3. “உயிர்சார் கிராமம்” (Biovillage) திட்டம் – உயிர்சார் முறையில் முழு கிராமங்கள் மாற்றம்.

4. இணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM) – உயிர்சார் உரங்கள் + வேதியியல் உரங்கள் இணைந்து பயன்படுத்தும் முறை.

5. மண்வளம் பரிசோதனை அட்டைகள் (Soil Health Card) மூலம் சரியான உரம் தேர்வு.

**எதிர்கால வாய்ப்புகள்**

1. நானோ தொழில்நுட்பத்துடன் உயிர்சார் உரங்கள் இணைப்பு

2. நுண்ணுயிரிகளை நானோகேரியர்களில் வைத்துச் சீராக மண்ணில் சேர்க்கும் புதிய முறை.

3. ஜீனியல் பொறியியல் நுண்ணுயிரிகள்

4. மண் நோய் எதிர்ப்பு மற்றும் ஊட்டச்சத்து உற்பத்தி திறன் அதிகமான புதிய உயிரிகள் உருவாக்கம்.

5. உயிர்சார் உர வணிகமயமாக்கல்

6. இளம் தொழில்முனைவோருக்கு (Agri Startups) வாய்ப்பு.

7. Organic Tamil Nadu Mission 2030 - மாநிலத்தின் 30% நிலப்பகுதி உயிர்சார் முறையில் மாற்றப்படும் திட்டம்.

தமிழ்நாட்டில் உயிர்சார் உரங்களும் உயிர்க்கள ஊக்கிகளும் வேளாண்மை துறையில் புதிய உயிர் ஊட்டத்தை வழங்குகின்றன. இவை மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து, சுற்றுச்சூழலுக்கு சேதமில்லாமல், விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தை உறுதிப்படுத்துகின்றன. மண்ணின் இயற்கை சமநிலையை மீட்டெடுக்கும் ஒரே வழி உயிர்சார் வேளாண்மை என்பதை இன்றைய நிலை உணர்த்துகிறது.

எனவே, எதிர்காலத்தில் “உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் - நிலைத்த தமிழ்நாட்டின் பசுமை வளர்ச்சிக்கு அடிப்படைத் தூண்” என்ற நிலை உருவாகும்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!